செய்தி வெளியீடு எண்:739 நாள்:17.09.2021

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் 1949 இல் நிறுவப்பட்ட மாநில அளவிலான முன்னோடி நிதி நிறுவனமாகும். இந்நிறுவனம் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை ஊக்குவிக்கும் வகையில் மாநிலத்தில் உள்ள குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு குறிப்பாக முதல் தலைமுறை தொழில்முனைவோருக்கு சிறப்பு கவனம் செலுத்தி நிதி உதவிகளை வழங்கி வருகிறது. மேலும் இக்கழகம் இதுவரை 1,27,000 தொழில்முனைவோருக்கு அவர்களின் தொழிலதிபர் கனவுகளை நிறைவேற்றும் விதமாக ரூ.19,500 கோடி அளவிற்கு கடன்களை வழங்கி உதவுகிறது.

கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக மார்ச் 2020 முதல் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கால் உலகம் முழுவதும் பெரும் பொருளாதார அதிர்ச்சிக்கும் சமூக நெருக்கடிக்கும் உள்ளானது. இப்பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்திட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பொருளாதாரத்தினை கடுமையாக பாதித்துள்ளன. தமிழகத்திலும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் கடந்த நிதியாண்டின் பிற்பாதியில் இக்கடின சூழலில் இருந்து மீண்டு வரும் நேரத்தில் இப்பெருந்தொற்றின் இரண்டாம் அலையினால் கடுமையாக பாதிக்கப்பட்டன. மேலும் இவ்விரண்டாம் அலையினால் ஏற்பட்ட விநியோக சேவை பாதிப்புகள் , தொழிலாளர் பற்றாக்குறை, பொருளாதார மந்தநிலை ஆகியவைகளால் இந்நிறுவனங்கள் கடும் நிதி நெருக்கடிக்கு ஆளாகியுள்ளன.

இந்நிறுவனங்களை இக்கடின நிலையிலிருந்து மீட்டெடுக்கும் பொருட்டு தமிழக அரசு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. மேலும் இந்நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சீர் செய்திடும் வண்ணம் ஒய்வு பெற்ற இந்திய ஆளுமை பணி அலுவலர் திரு. சுந்தரத்தேவன் அவர்கள் தலைமையில் ஓர் குழுவினை தமிழக அரசு அமைத்துள்ளது. இத்தருணத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கிடும் விதத்தில் எளிய விதிமுறைகளோடு நிதிநிலை மேம்பாடு திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு 17.09.2021 அன்று தமிழக அரசின் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் இக்கழகத்திடம் கடன் பெற்ற குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.75 லட்சம் வரை கூடுதல் பிணைய சொத்து மற்றும் செயலாக்க கட்டணம் ஏதுமின்றி கடனுதவி வழங்கப்படும். இதன்மூலம் கோவிட் தொற்றுநோயின் இரண்டாவது அலை காரணமாக ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடியில் இருந்து இந்நிறுவனங்கள் மீண்டு, இயல்பு நிலைக்கு திரும்ப எதுவாக இருக்கும். இத்திட்டத்தின் கீழ் 1400 குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு சுமார் ரூ.350 கோடி அளவிற்கு கடனுதவி வழங்கப்படும்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் நிதி உதவி வேண்டிய மூன்று தொழில்நிறுவனங்களுக்கு ரூ.3.49 கோடிக்கான கடன் அனுமதி ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு, குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கையில் நாட்டில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. தமிழகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி கொண்டிருக்கின்ற இந்நிறுவனங்களை தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நான்காம் தொழில் புரட்சிக்கு (Industry 4.0) அவற்றினை தயார்படுத்தி உலக அளவில் போட்டித்தன்மையுள்ளவையாக இந்நிறுவனங்களை மாற்றுவதற்கும், தமிழக அரசின் புத்தாக்க தொழில் சூழல் அமைப்பை ஊக்குவிப்பதற்கு போதிய நிதி உதவியை வழங்கிட வேண்டி தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், முறையே தமிழ்நாடு குறு மற்றும் மிகக்குறு நிறுவனங்களின் சங்கம் – பிரெய்ட்ரிச் நாமன் அறக்கட்டளை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வளர்ச்சி மையம் – தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் திருச்சிராப்பள்ளி ஆகியற்றுடன் 17.09.2021 அன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

Dr கார்ஸ்டென் க்ளென் பிராந்திய அலுவலகத்தின் தலைவர் தெற்கு ஆசியா Friedrich Naumann Foundation for freedom, புது டெல்லி , மற்றும் டாக்டர் திருமதி ஷாஜி தாமஸ், இயக்குநர் (CEDI–NIT) திருச்சிராப்பள்ளி நிகர் தளத்தில் உரையாற்றும் போது இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாய் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் தங்கள் நிறுவனங்களுடன் இணைந்து குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்க முடியும் என நம்பிக்கை தெரிவித்தனர்.

மேலும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் பணியில் இருக்கும் போது காலமான தொழிலாளர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்கிடும் வகையில் வெவ்வேறு பதவிகளுக்கு இக்கழகத்தால் நியமிக்கப்பட்ட 4 பேருக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்வின் போது தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திரு ஹன்ஸ் ராஜ் வர்மா இ.ஆ.ப அவர்கள், அரசு தொழில்துறை சிறப்பு செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன் இ.ஆ.ப மற்றும் இக்கழகத்தின் முதன்மை அதிகாரிகளும் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9